**செய்தி வெளியீடு எண்.834** **நாள்.3.10.2008**

**பத்திரிக்கை செய்தி**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின், சென்னை 14 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் கண்ட இடங்களில் 11.10.2008 அன்று காலை 10.00 மணிக்கு மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக பொருட்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறை தீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 14 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு – 1**

| *வ.எண்* | *அலுவலகம்* | ***கூட்டம் நடக்கவிருக்கும் இடம்*** |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி.<br>வாத்தியார் கந்தப் பிள்ளை தெரு, சென்னை - 12 |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி.<br>103, எண்ணூர் நெடுஞ்சாலை, கார்நேஷன் நகர்.<br>சென்னை - 21 |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடம்,<br>ராஜா தெரு, பெரம்பூர், சென்னை - 11<br>( பிருந்தா தியேட்டர் எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | 60, ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில்,<br>சத்தியவாணிமுத்து நகர் குடியிருப்பு வளாகம் ,<br>ஓட்டேரி, சென்னை - 12 |
| 5 | அம்பத்தூர் | மாசிலாமணி உயர்நிலைப்பள்ளி, நேரு தெரு,<br>செந்தில் நகர், திருமுல்லைவாயல், சென்னை 62 |
| 6 | வில்லிவாக்கம் | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>பள்ளிக்கூட தெரு, விருகம்பாக்கம்,<br>சென்னை - 92 |
| 7 | திருவொற்றியூர் | ஜெய் கோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப்பள்ளி,<br>409, டி.எச் ரோடு, திருவொற்றியூர்,<br>சென்னை - 19 |
| 8 | தி நகர் | பதிப்பகச் செம்மல் கணபதி அரசு மேல்நிலைப்பள்ளி(பின்புறவழி),<br>பழைய எண் 54, புதிய எண் 95, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24 |
| 9 | மயிலாப்பூர் | மாநகராட்சி அலுவலகம்.<br>29 சிபி.ராமசாமி ரோடு, ஆழ்வார்பேட்டை,<br>சென்னை 18 |
| 10 | பரங்கிமலை | நகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>ஜமீன் ராயப்பேட்டை ( படவட்டம்மன் கோயில் அருகில்)<br>குரோம்பேட்டை, சென்னை - 44 |
| 11 | தாம்பரம் | அரசினர் மேல்நிலைப்பள்ளி<br>சுதர்சன நகர், மாடம்பாக்கம், சென்னை 73 |
| 12 | சைதாப்பேட்டை | மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>மாந்தோப்பு, ஜாபர்கான் பேட்டை, சென்னை - 15 |
| 13 | ஆயிரம் விளக்கு | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி<br>தானா தெரு, புரசைவாக்கம், ன்னை - 7 |
| 14 | சேப்பாக்கம் | மாநகராட்சி துவக்கப்பள்ளி, பெல்ஸ் ரோடு,<br>சென்னை - 5 |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**